# பண்பாட்டுவியல் நோக்கில் முல்லைப்பாட்டு

36

த.இளவரசி

பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்,

தமிழ், கலை,அறிவியல் கல்லூரி, மயிலம்.- 604 304

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் என்று அழைக்கப்படுபவன பத்துப்பாட்டும் , எட்டுத்தொகையும் ஆகும். இப்பகுப்பில் உள்ள பதினெட்டு நூல்களும் வாழ்வியல் பற்றியச் செய்திகளையே பேசுகின்றன . இதிலுள்ள அகநூல்கள் பண்டைத் தமிழருடைய காதல் வாழ்க்கையினைப் பற்றியும் , புற நூல்கள் பண்டைத் தமிழரின் போர்ச்சிறப்பினைப் பற்றியும் கூறுகின்றன . அவற்றுள் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான முல்லைப்பாட்டில் காணப்படக்கூடிய பண்பாட்டுகள் குறித்துக் காண்பதாக இவ்வாய்வுச் சுருக்கமானது அமைகின்றது.

**கருச்சொற்கள்**

பண்பாடு, தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, வாழ்வியல், நம்பிக்கைகள், பழக்க வழக்கம்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பண்பாடெனப்படுவது ஒருவகையில் வாழ்வியல் முறைகளைக் குறிப்பதாக அமைகின்றது . மனிதர்களது நடத்தைகள் , நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றின் தொகுப்பாக இது காணப்படுகின்றது . அவ்வாறே இலக்கியங்கள் என்பனவும் மனித சமுதாயத்தைப் பண்படுத்தும் நோக்கில் அமைந்தவையே . மனித இனத்தையும் , மனத்தையும் பண்படுத்துவதில் முல்லைப்பாட்டு சிறப்பானதொரு நிலையினைப் பெற்றுத் திகழ்கிறது என்று கூறலாம். அவ்வகைமையில்

இவ்விலக்கியம் பண்பாட்டுப் பதிவுகளை இனம் காண்பதற்கு ஒரு ஆதாரமாக இருந்து வருகின்றது என்று கருதப்படுகின்றது.

**முல்லைப்பாட்டு**

தமிழ்ச் சான்றோர்களால் இயற்றப்பெற்ற சங்க காலத்துத் தமிழ் நூல்களாகக் கருப்பெறுவன எட்டுத் தொகையும், பத்துப்பாட்டு ஆகிய இரண்டு நூல்கள் ஆகும் . இவ்விருவகை நூல்களும், அளவாலும் திறத்தாலும் பொருளாலும் காலத்தாலும் வகைப்படுத்தப்பெற்றன என்பர் . இவ்விருவகை நூல்களும் தமிழ்மக்களின், நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், சமய, சமுதாய நம்பிக்கைகள், அகம் புறம் ஆகிய வாழ்க்கை நெறிகள் ஆகிய எல்லாவற்றையும் பொதிந்து வைத்திருக்கின்ற கருவூலங்காக விளங்கி வருகின்றன.

**பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு**

பத்துப் பாட்டு நூல்களின் தொகுப்பில் முல்லைப்பாட்டு இடம்பெற்றிருப்பதனை பின்வருகின்ற

பழம்பாடல் ஒன்று தெளிவுபடுத்துகிறது.

முருகு பொருநாறு பானிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக்காஞ்சி – மருவினிய
கோலநெடுநல் வாடை கோல் குறிஞ்சிபட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

என்று பாடப்பட்டுள்ள பழம் பெரும்பாடலில் முதல்வரியில் இடம் பெற்றுள்ள முல்லை என்ற சொல் முல்லைப்பாட்டைக் குறிப்பதாகும் . பத்துப்பாட்டு என்ற தொகைப் பெயரில் காணப்படும் பாட்டு என்பதைத் தம் பெயரிலேயே கொண்டுள்ள பாட்டுகளுள் இந்நூல் முதல் நூலாகும் . இப்பாடல் 103 அடிகளைப் பெற்றுத் திகழ்கின்றது . பத்துப்பாட்டு நூலில் உள்ள பத்து நூல்களுள் அடி அளவால் மிகச்சிறிய நூலாகத் திகழ்கின்றது . இதனைப்பாடியவர் காவிரிப்பூம்படடினத்துப் பொன்வணிகனார் மகனார் நம்பூதனார் ஆவார் , முல்லை நில மக்களின் வாழ்வியல் , ஆயர் இனமக்களின் வாழ்க்கை முறைகளை விளக்குவதாக அமைவதோடு பண்பாட்டினையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**தமிழரது பண்பாட்டினைச் சித்தரிக்கும் முல்லைப்பாட்டு**

முல்லைப்பாட்டு தமிழர் தம் பண்பாட்டின் சிறப்புகளை விளக்குகின்றது . தமிழரது பண்பாடுகளிலொன்றாக கடவுள் நம்பிக்கை இருந்ததென்பதனை கடவுள்களது பெயர்களைச் சுட்டுவதன் ஊடாக நப்பூதனார் விவரிக்கின்றார் . முல்லை நிலக்கடவுள் திருமாலை வழிபட்டதனை தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது இதனை,

**'மாயோன் மேய காடுறை உலகமும்[1]**

என்ற வரிகள் முல்லை நில மக்கள் திருமாலை வழிபட்டமையைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது . முல்லை நிலமக்கள் , ஆயரும், ஆய்ச்சியரும் இடையரும் , இடைச்சியரும் ஒருங்கு கூடிக் குரவைக் கூத்தாடி திருமாலுக்கு வணக்கம் செலுத்தியதை கலித்தொகை இலக்கியமும்,

இவர்கள் வணங்கும் பெருந்தெய்வம் மால் திண்ணிதா
தெய்வமால் காட்டிற்று இவட்கு என்று குறிப்பிடுகின்றது.

'உலகம் வளைஇ நேமியொடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை நீர் செல நிமிர்ந்தமால்' என்னும் வரிகள் முல்லைக்குரிய தெய்வமான சங்கு, சக்கரம் ஏந்திய திருமாலைக் குறிக்கின்றன.

**வாழ்வியல் ஒழுக்கம்**

வாழ்வியல் தொடர்பான ஒழுக்கம் பற்றி முல்லைப்பாட்டு விளக்குகின்றது . பண்பாடெனப்படுவது நிலப்பண்பையும் உளப்பண்பையும் குறிக்கும் என்பதற்கேற்ப ஐந்திணைகளை வகுத்து முல்லைப்பாட்டில் முல்லை நிலத்திற்கேற்ப வாழ்வியல் ஒழுகலாறுகளை விவரிக்கிறது. 'முல்லை சான்ற கற்பு' என்று கற்புடன் தொடர்புபடுத்தப்படுகிறது முல்லைத் திணை போர் நிமித்தமாகவோ , பொருள் தேடல் நிமித்தமாகவோ பிரிந்து சென்ற தலைவன் வரும் வரை ஆற்றியிருத்தல் தலைவியின் நிலைப்பாடு ஆகும். இதுவே முல்லைத் தினையாகப் பேசப்படுகிறது. இத்திணையின் முதற்பொருளாக அமைந்த நிலம் காடுறை உலகம் ஆகும். பெரும் பொழுது கார்காலமும், சிறுபொழுது மாலைக்காலமும் குறிப்பாகக் கார்கால மாலைக்காலத்தைக் குறிப்பதாகும் . நிலம், காலம் சார்ந்த இயற்கையின்

அடிப்படையில் எழும் மனஉணர்வுகளை இந்த முல்லைப்பாட்டு சித்தரிக்கின்றது.
தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவி ஆற்றியிருத்தல் குறிப்பிடப்படுவதால் முல்லைக்குரிய இருந்தலும், இருத்தல் நிமித்தமும் என்னும் உரிப்பொருளைக் கொண்டிருக்கிறது.

**செறி இலைக் காயா அஞ்சனம் மலர**
**முறி இணர்க் கொன்றை நான் பொன் கால**
**கோடல் குவிமுகை அங்கை அவிழ**
**தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப[2]**

என்ற வரிகள் முல்லை நிலத்துக்குரிய கருப்பொருட்களை விளக்குகின்றன.

முல்லைப்பாட்டு முல்லைத் திணைக்குரிய அகத்தினை இயல்புகளை மட்டும் அல்லாமல் , முல்லைக்குப் புறம்பாகக் கூறப்படும் வஞ்சித்திணையின் இயல்புகளையும் குறிப்பிடுகின்றது . போர் மேற்கொண்டு காட்டில் தலைவன் பாசறை அமைத்துத் தங்கியிருப்பது வஞ்சித்திணைப் பாற்பட்டதாகும். இருப்பினும் முல்லை ஒழுக்கமே முதன்மை பெற்றுள்ளது . கற்பின் வழுவாது பொற்புடன் இருத்தல் என்று முல்லைக்கு விளக்கம் செய்வர் . எத்தகைய துன்பம் வரினும் தன்னிலையில் தளராது விளங்கும் ஒருத்தியை முல்லை சான்ற கற்பினள் என்பர்.

**மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்**
**சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்[3]**

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கேற்ப இந்நூலில் பாட்டுடை மாந்தர்கள் பெயர் குறிப்பிடவில்லை.

**கற்பு நெறி**

மகளிர்க்குரிய பண்புகளில் சிறப்பானதாகப் போற்றப்படுவது கற்பு நெறியே முல்லைப்பாட்டு பழந்தமிழரின் கற்பு நெறி குறித்து மிகுதியும் பேசுகின்றது . வினை முடித்தற் பொருட்டுப் பிரிந்து சென்றுள்ள தலைவனை எண்ணி ஆற்றளாகிய தலைவியைக் கண்டு தலைவன் மீண்டு வரும் வரை ஆற்றியிருப்பாயாக என்று முதுபெண்டிர் கூறுகின்றனர் . உடன்படாத தலைவிக்காக விரிச்சி கேட்கின்றனர். ஊரின்
புறத்தே சென்று பெண்கள் முல்லை மலர்களையும் நெல்லையும் தூவி விரிச்சிக் கேட்டு நின்ற பொழுது இடையர் குல பெண்ஒருத்தி.

**'கொடுங்கோற் கோவலர் பின் நின்று**
**இன்னே வருகுவர் தாயர்[4]** **(மு.பா.15-16)**

என்கிறாள்.

கன்றுகளைப் பார்த்து அவள் கூறிய நற்சொற்களைத் தாங்கள் கேட்ட பொழுது , போர் மேற்சென்ற தலைவன் வினைமுடித்து , போர் மேற்சென்ற தலவன் வினை முடித்து விரைவில் திரும்புவார் என்று ஆற்றுப்படுத்துகின்றனர். தலைவி ஆற்றாதாளாய் மீண்டும் மயங்குகின்றாள் , நெட்டுயிர்க்கின்றாள் அணிந்துள்ள அணிகலன்கள் நெகிழ அம்பு தைத்த மயில் போல நடுங்கி நிற்கிறாள் இந்நிலையினை மாற்றிக் கொள்ளவும் தன் துன்பத்தைச் சற்று ஆற்றிக்கொள்ளவும் தன் நெஞ்சத்தை வேறொன்றின் மேல் திருப்பிக் கொள்ள கொட்டும் அருவியின் இன்னோசையில் செவி சாய்கின்றாள் . அப்போது தலைவியின் காதுகள் நிரம்பும்படியாகத் தலைவன் வரும் ஆரவார ஓசை எழுந்ததையும் ,

முல்லைப்பாட்டு, அடிகள் தெரிவிக்கின்றன . இவை தலைவியின் கற்பு நெறியையும் , தலைவன் பிரிவால் வாடும் தலைவயின் ஆற்றியிருந்தலையும் விளக்குதலால் பண்டைத் தமிழரின் கற்பு நெறி வாழ்வின் ஆழம் புலப்படுகிறது.

**விரிச்சிக் கேட்டல்**

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர் சகுனம் பார்க்கும் வழக்கம் பண்டு தொட்டே மக்களிடம் இருந்து வருகின்றது. இவ்வழக்கம் நம்பிக்கையின் அடிப்படையில் உண்டாவதாகும். சகுனம் பார்க்கும் வகையில் ஒன்று விரிச்சி வருங்காரியத்தை விரிவாக முன்னரே தெரிவிப்பது விரிச்சியாகும்.

தலைவன் பிரிவை ஆற்றியிருக்கின்ற தலைவியின் நிலையைப் பற்றி எடுத்துரைக்கும் இடத்தில் முல்லைப்பாட்டு பண்டைய மக்களின் விரிச்சிக் கேட்டல் என்னும் நம்பிக்கையைப் பற்றி பேசுகின்றது.

முல்லைப்பாட்டில் தலைவி தலைவன் பிரிவாற்றாமையை நினைத்து வருந்தும் பொழுது அவளைச் சுற்றியுள்ள முதுமை உடைய பெண்கள் முல்லைப் பூவையும் , நெல்லையும் தூவி இறைவனிடம் நற்சொல் கேட்டனர்.

**யாழ் இசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு**
**நாழி கொண்ட நறுவீ முல்லை**
**பெருமுது பெண்டியர் விரிச்சி நிற்ப**[5]

அவ்வாறு கேட்டு நிற்கும் போது அப்பக்கம் செல்வோர் சொல்லும் சொல் தமக்கு ஏற்றதாக இருப்பின் அவர்கள் மேற்கொள்ளும் செயல் இனிது நிறைவேறும் என நினைத்து நம்பிக்கை கொள்வார்.

**போர்ப்பாசறை நிகழ்வுகள்**

வஞ்சித்திணை சார்ந்த போர்ப்பாசறைப்பற்றி முல்லைப்பாட்டு குறிப்பிடுகின்றது . தலைவன் பகை நாட்டிற்கு சென்று அங்குள்ள காட்டை அழித்து முள்ளை வேலியாக அமைத்து தூண்களை நிறுவி கடல் போல அகலமாக பாசறை அமைத்தான் என்பதை,

**கான்யாறு தழிஇய கல்நெடும் புறவில்**
**சேண் நாறு பிடவமொடு மைம்புதல் எருக்கி**
**இடுமுள் புரிசை ஏமுற வளைஇப்**
**படுநீர்ப் புணரியில் பரந்த பாடி**[6]

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

**பாசறையில் தலைவன் நிலை**

கற்புக்காலத்தில் தலைவன் தலைவியை பிரியாது இருக்க நினைப்பதும் பொருள் காரணமாக அல்லது போர் காரணமாகப் பிரிய மனம் கொள்ளாது வருந்துவதும் பிரிந்திருக்கும் காலத்தில் தலைவியை நினைத்து ஆற்றாத நிலைப்பாடுடையவனாகின்றான்.

போர் காரணமாகப் பிரிந்த தலைவன் பாசறையில் இரவு தங்கி இருக்கும் பொழுது கண் உறக்கம் கொள்ளாமல்,

**மண்டு அவர் நசையொடு கண்படை பெறா அது**[7]

முதல் நாள் நடந்த போரில் நிகழ்ச்சிகளை எண்ணிப்பார்க்கின்றர்.

**எடுத்து எறி எட்கம் பார்ய்தலின் புண்கவர்ந்த**
**பிடிக்கணம் மறந்த வெழம் வேழத்துப்**

KAMARAJ COLLEGE
Accredited with A+ Grade by NAAC
இந்து சமுதாய நலச்சங்கங்களால் 1966–ல் தொடங்கப்பட்ட கல்லூரி
(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)
THOOTHUKUDI - 628003

**முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்தீ**
**நகை தாழ் கண்ணி நல்வலம் திருத்தி**
**அரசு இருந்து பணிக்கும் முரசு முழங்கும் பாசறை**
**தலைவன் மறுநாள் போரில் வெற்றி பெற்றவுடன் நிம்மதி பெருமூச்சுடன்**
**இன் துயில் வதியுநற்**[10]

இனிதாக தலைவன் உறங்கினான் என்ற கருத்தின் மூலம் வீரம் நிறைந்தவனாக தலைவன் இருந்தது புலனாகின்றது.

**மங்கையர் வார் சடை அணிதல்**

பாசறையில் விளக்கேற்றும் மகளிர் தான் உடுத்தியிருந்த ஆடையுடன் வாளையும் சேர்த்து அணிந்திருந்தனர் என்பதை,

**திண் பிடி ஒள் வாள்**
**விரவு வரிக் கச்சின் பூண்ட மங்கையர்**[11]

என்ற வரிகள் வாள் அணியும் பழக்கத்தை உணர்த்துகின்றது.

**பொழுது அறிவித்தல்**

வீரர்கள் நாழிகை அறிவதற்கு நாழிகை வட்டிலைப் பயன்படுத்தி இருக்கின்றனர் . வட்டிலில் நீரிட்டு சிறு துளைவழியாக நீரினைக் கசிய விட்டு நீரை அளந்து காணும் கருவி நாழிகை வட்டில் குறுநீர்க் கன்னல் (மு.பா.58) என்ற வரி மூலம் அறிய முடிகின்றது.

**மெய்க்காப்பாளர்**

அரசருக்கு நம்பிக்கையான வீரர்களே அரசனின் மெய்க்காப்பாளாராக நியமிப்பது பண்டைய வழக்கமாகும்

**உடம்பில் உரைக்கும் உரையாநாவின்**
**படம்புகு மிலேச்சர்**[12]

என்று முல்லைப்பாட்டு கூறுகிறது.

மன்னனிடம் ஒன்றைச் சொல்ல விழைபவர் அம்மன்னனை வணங்கி வாழ்த்திய பிறகே தாங்கள் சொல்ல வந்த செய்தியைச் சொல்லும் வழக்கம் பண்டைக்காலத்தில் இருந்திருக்கிறது.

அரசனது மெய்க்காப்பாளர் மெய்ப்பை என்னும் சட்டை அணியும் வழக்கம் கொண்டிருந்தனர்.

**மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து**
**வலிபுணர் யாக்கை, வண்கண்யவனர்**[13]

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

**முடிவுரை**

முல்லைப்பாட்டு தமிழரின் கற்பு நெறி பற்றியே மிகுதியாகப் பேசுகின்ற போதும் , வஞ்சித்தினை பற்றிய செய்தியும் விளக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

விரிச்சிக் கேட்டல் வழக்கம், போர்ப்பாசறை அமைப்பு, நாழிகை வட்டில், மெய்க்காப்பாளர் நியமித்தல் ஆகிய பண்டைத் தமிழரின் வழக்கங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

முல்லைத் தினைக்குரிய 'இருத்தல்' என்னும் உரிப்பொருளுக்குச் சிறப்பாகப் பொருந்தி சிறந்த

பண்பாட்டுப் பதிவாக முல்லைப்பாட்டு விளங்குவதனை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

**அடிக்குறிப்பு**

தொல்.அகத்.நூ.5

முல்லைப்பாட்டு.வரி.93 -96

தொல்.அகத்.நூ.57

முல்லைப்பாட்டு.வரி.15 – 16

மேலது,8 – 11

மேலது,24 – 28

மேலது,67

மேலது,69 – 76

மேலது,78 – 79

மேலது.80

மேலது,41 – 47

மேலது,65 – 66

மேலது.60 - 61

**பார்வை நூல்கள்**

**இளம்பூரணர்** **தொல்காப்பியம் பொருளதிகாரம்**
சாரதா பதிப்பகம், சென்னை – 1987

**சோமசுந்தரனார்.பொ.வே.,** **பத்துப்பாட்டு மூலமும் உரையும்**
திருநெலிவேலி சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை – 2007.

**சுப்பரமணியன் ச.வே.,** **முல்லைப்பாட்டு** உரை பதிப்பு
மெய்யப்பன் பதிப்பகம்,
முதல் பதிப்பு டிசம்பர் – 2009

**சோம சுந்தரனார் பொ.வெ.,** **முல்லைப்பாட்டு மூலமும் உரையும்**
திருநெல்வேலி சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை - 2007